அரசியல் சிந்தனை நூல்வரிசை - 15

# "தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும்"



சி.அ.யோதிலிங்கம்

வெளியீடு

சமூகவிஞ்ஞான ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வுமையம் மாதந்தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல்வரிசையில் 15வது நூலாக சி.அ.யோதிலிங்கம் எழுதிய **"தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும்"** என்ற இச்சிறுநூல் வெளிவருகின்றது. 2009 க்கு பின்னர் தமிழ் அரசியலை மீள வாசிப்பு செய்வதற்கு இச்சிறுநூல் பெரிதும் உதவும் என்று நம்புகின்றோம்.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்று ரீதியாகவே பல நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. அதற்கு வரலாற்று ரீதியான தமிழ் அரசியலின் குறைபாடுகளும் அவ்வப்போது ஏற்படுகின்ற நெருக்கடிகளும் காரணமாக அமைந்திருக்கின்றன. இந் நெருக்கடிகளையும் குறைபாடுகளையும் அடையாளம் கண்டு முகங்கொடுக்காமல் தமிழ்த்தேசிய அரசியலை ஒருபோதும் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

தமிழ் அரசியல் மக்கள் பங்கேற்பு அரசியலைக் கட்டியெழுப்பாமை, ஜனநாயக அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பாமை, ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தை வலுவாகப் பின்பற்றாமை, கிழக்கைக் கையாள்வதற்கான மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுக்காமை, சமூகமாற்ற அரசியலைப் போதியளவு இணைக்காமை, புவிசார் அரசியலில் அக்கறை கொள்ளாமை என்ற குறைபாடுகளை மரபு ரீதியாக கொண்டிருந்தது. அதே வேளை செப்ரெம்பர் 11, ஏப்ரல் 21 என நெருக்கடிகளும் அவ்வப்போது வந்த சேர்ந்தன. இவற்றையெல்லாம் முழுமையாக ஆய்வு செய்து முகங் கொள்வதற்க்கான மார்க்கங்களை கண்டுபிடிப்பதில் தமிழத் தேசிய சக்திகள் வரலாற்று ரீதியாகவே தவறிழைத்திருக்கின்றன.

வரலாறு என்பது நெருக்கடிகளை மட்டும் தருவதில்லை. வாய்ப்புகளையும் தரும். வாய்ப்புகளின் பலத்தில் நின்று கொண்டு நெருக்கடிகளை கையாளும் திறமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தமிழ்த் தேசிய அரசியலின் வெற்றி தங்கியிருக்கின்றது. பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் எமது முன்னோடிகள், விலை போகாத அரசியல் அர்ப்பணமிக்க தியாகம் என்பவற்றை எமக்கு சொத்துக்களாக விட்டுச் சென்றுள்ளனர். இந்தப் பலம் தான் தமிழ்த்தேசிய அரசியலை சிதைக்க நினைக்கும் பெருந்தேசிய வாதிகளிடமிருந்தும், சர்வதேச, பிராந்திய சக்திகளிடமிருந்தும், அவர்களது முகவர்களிட மிருந்தும் அதனைக் காப்பாற்றி வந்திருக்கின்றது.

இந்த வரலாற்று விழுமியங்கள் தமிழ் அரசியலை சர்வதேசம் வரை கொண்டு வந்து விட்டிருக்கின்றது. இந்தப் பலத்தில் நின்று கொண்டு முன்னேறுவது பற்றி நாம் யோசிக்க வேண்டும்

புவிசார் அரசியல், புலம்பெயர் மக்களின் வலிமை, உலகத் தமிழர்களின் உணர்வுடன் கூடிய பங்களிப்புக்கள் உலக முற் போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு என்பன இப்போதும் தமிழ்த் தேசிய அரசியலின் வலிமையைக் கூட்டுகின்றன.

இந்தப் பலங்களில் நின்று கொண்டு முன்னேறு வதற்கு தமிழ் அரசியல் பற்றிய மீள் வாசிப்பு அவசியம். குறை பாடுகளை ஏற்றுக் கொள்வதற்க்கும், அதனைக் கையாள் வதற்கு முயற்சிப்பதற்கும் நாம் ஒரு போதும் தயங்கக் கூடாது.

இச்சிறு நூல் தமிழ் அரசியல் பற்றிய மீள் வாசிப் பிற்கு பெரிதும் உதவும் என்று நம்புகின்றோம். வாசகர் கள் எமது ஏனைய நூல்களுக்குத் தந்த ஆதரவு போல இதற்க்கும் தருமாறும் தாழ்மையாக வேண்டுகிறோம்.

நன்றி.

சமூகவிஞ்ஞான ஆய்வுமையம்.
28,செம்மணி வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம் என்பது ஒரு மக்கள் திரளாகும். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞை அல்லது கூட்டு சூளுரையாகும். இந்த வகையில் தமிழ்த் தேசியம் என்பது தமிழ் மக்களின் கூட்டுப் பிரக்ஞையாகும். இத்தமிழ்த் தேசியம் நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம், எனும் நான்கு தூண்களின் மீது கட்டியெழுப்பப்பட்டதாகும். சிங்கள தேசம் இத் தூண் களை அழிப்பதன் மூலம் தமிழ் தேசத்தையும் அதன் வழி தமிழ்த் தேசியத்தையும் அழிக்க முற்படுகின்றது. இவ்வாறு தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவதே இனப்பிரச்சனையாகும். இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என சிங்கள தேசம் கருதுவதனாலேயே இவ் அழிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்கின்றது. சிங்கள பௌத்த தேசியவாதம் இவ் அழிப்பு நடவடிக் கைகளுக்கு கருத்து நிலைப்பின்பலத்தை வழங்குகின்றது. சிறீலங்கா வின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பும் அதன் அடிப்படையிலான அரசயந்திரமும் இவ் அழிப்பு நடவடிக்கைகளை நடைமுறையில் மேற் கொள்கின்றது. சிறீலங்காவின் நீதி மன்றங்கள் கூட இதற்கு விதிவிலக் காக இல்லை.

புறரீதியான அழிப்புக்கு புறம்பாக அகரீதியாகவும் தேசியம் அழிக்கப்படலாம். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞை யாக இருப்பதனால் மக்கள் திரளிற்கு தடையாக இருக்கின்ற அக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளின் வளர்ச்சியும் தேசியத்தை சிதைக்கும். அதே வேளை தேசியத்தை பேணுவதற்கான அரசியல் நிலைப்பாடு பலவீனமடையும் போதும் தேசியம் சிதைவடையும். 2009ல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து புற ரீதியாகவும், அக ரீதியாக வும் திட்டமிட்டு தமிழ்த்தேசியம் சிதைக்கப்பட்டு வருகின்றது. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10வது வருடத்தைத் தாண்டிய நிலையில் இந்தப் புற அக சிதைப்பு பற்றிய பரிசீலனை மிக அவசியமானதாகும்.

முதலில் புறரீதியான சிதைப்பைப் பார்ப்போம். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின் சிறீலங்கா அரசாங்கம் முதலில் பச்சைச் சூறையாடலை தமிழர் தாயகத்தில் மேற்கொண்டது. மன்னராட்சிக் காலத்தில் வெற்றி பெற்ற அரசுகள் தோல்வியடைந்த அரசினை எவ்வாறு சூறையாடுமோ அவ்வாறான வகையில் சூறை யாடலை மேற்கொண்டது.

விடுதலைப்புலிகளின் வங்கியில் இருந்த நகைகள், பணம் தொடக்கம் இயக்கத்தின் அனைத்து சொத்துக்களும் கொள்ளை யிடப்பட்டன. விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் என்பது தமிழ் மக்களின் சொத்துக்கள். அவை அனைத்தும் தமிழ் மக்களிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அது நடைபெறவில்லை. போதாக் குறைக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த வியாபாரிகளும் கொள்ளை யிட அனுமதிக்கப்பட்டனர். விடுதலைப்புலிகள் பயன்படுத்திய நிலங்கள் அனைத்தையும் படையினர் கைப்பற்றியிருந்தனர், வீடுகளை தங்களது உடமைகளாக்கினர். இவற்றுக்கு புறம்பாக மக்களின் சொந்தக் காணிகளையும் கைப்பற்றி உடமை கொண்டிருந்தனர். விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர். கேப்பாப்புல மக்கள் 500 நாட்களுக்கு மேலாக போராடியும் இதுவரை தீர்வு கிடைக்க வில்லை. வன்னிக்காடுகள் தாயகத்தின் இயற்கை அரண்களாக இருந்தன. விடுதலைப் புலிகளின் நடைமுறை அரசு காட்டைப் பேணு வதிலும் பாதுகாப்பதிலும், மிகவும் அக்கறை செலுத்தியிருந்தது. மரங்கள் கண்டபடி தறிப்பது தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் போர் முடிவடைந்ததும் தென்னிலங்கையில் இருந்து வந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு மரங்களை கண்டபடி தறித்துச் சென்றனர். மணல் கொள்ளை, மண் கொள்ளை என்பனவும் வகை தொகையின்றி இடம்பெற்றன.

இப்பச்சை சூறையாடலுக்குப் புறம்பாக தமிழ்த் தேசத்தை தாங்கும் தூண்களாக இருந்த நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றின் அழிப்பு திட்டமிட்ட வகையில் கிரமமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிழக்கில் நிலப்பறிப்பு பூர்த்தியாகிய நிலையில் தாயக இணைப்பின் இன்னோர் மையமாகவும், கேந்திரப்பிரதேசமாகவும் இருக்கும் முல்லைத்தீவு மாவட்டமும், வவுனியா வடக்குப் பிரதேசமும் குறி வைக்கப்பட்டது. நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவில் மருதோடைக்கு அப்பால் இருக்கும் வெடிவைத்தகல்லு, கொக்கச்சான் குளப்பிரதேசங்களில் சிங்களவர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டனர். இருபதினாயிரம் வரையிலான சிங்களவர்கள் குடியேற்றப்பட்ட தாக செய்திகள் வருகின்றன இச் சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் ஒன்றின் பெயர் "நாமல்புர" என்பதாகும். கூட்டமைப்பின் ஆதர வுடன் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்திலும் இந் நிலப் பறிப்பு தொடர்ந்தது. இக்குடியேற்றங்களுக்கு காணிப்பத்திரம் வழங்கும் விழாவில் கூட்டமைப்பின் தலைவர்களான சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு அதற்கு அங்கீகாரம் வழங்கினர்.

தற்போது மகாவலி டு வலயம் என்ற பெயரில் குடியேற்ற முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. இது முழு முல்லைத்தீவு மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக வளர்கின்றது. இது தவிர து வலயம், மு வலயம் என்பவற்றை அமைக்கும் முயற்சியும் இடம்பெறுகின்றது. இவை பூர்த்தியாகுமானால் முழுவன்னிப்பிரதேசமும் ஆக்கிரமிப்புக் குள்ளாக்கக்கூடிய அபாய நிலை தோற்றம் பெறும். இக்குடியேற்ற செயற்பாடு தொடர்பாக வனபரிபாலன திணைக்களம், வனஜீவ ராசிகள் திணைக்களம், பௌத்த கலாச்சார அமைச்சு, தொல்பொருட் திணைக்களம், அனுராதபுர மாவட்ட செயலகம் என்பவற்றிற்கிடையே கூட்டுப்பங்களிப்பு உண்டு. முப்படையினரும் அதற்கான ஒத்துழைப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வழங்குகின்றனர். பௌத்தர்கள் வாழாத இடங்களில் கூட புத்தர் சிலைகள் அமைக்கப்படுகின்றன.

இரண்டாவது தொழில் வாய்ப்புக்களைப் பறித்தலாகும். மீள் கட்டுமானச் செயற்பாடுகளில் சிங்களத் தொழிலாளர்களே அதிகள வில் ஈடுபடுத்தப்பட்டனர். அரச வேலைவாய்ப்புக்களைப் பொறுத்த வரை கீழ் மட்ட பணிகளான மின்மானி வாசிப்பு,, சாரதி, சிற்றூழியர் தொழில்களுக்கு கூட சிங்களவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவ் வளவிற்கும் போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் வன்னியிலும், வெளியிலும் வேலையின்றி தவிக்கின்றனர்.

இதற்குப் புறம்பாக சிங்கள ஆதிக்கம் வாய்ந்த நிதி நிறுவனங்கள், வங்கிகள் இன்று வடபகுதியில் கூடாரமடித்து மக்களின் சேமிப்புக்களை கொள்ளையடிக்கின்றன. நுண்கடன் நிறுவனங்களின் தொல்லைகள் வேறு. அது பலரை தற்கொலை செய்ய வைத்துள்ளன.

மூன்றாவது கல்வி ஆக்கிரமிப்பாகும். இதற்கு முதற்பலி யானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தான். இன்று கலைப்பீடத்தைத் தவிர ஏனைய துறைகளில் குறிப்பாக சட்ட, முகாமைத்துவ, விஞ்ஞான, மருத்துவ, பொறியியல் பீடங்களில் சிங்கள மாணவர்களே அதிகமாக உள்ளனர். தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைப் பள்ளியாக இருக்க வேண்டிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அத்தகுதியை இழந்து வருகின்றது. கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இதே நிலைதான்.

அகரீதியான சிதைப்பில் முதலாவது தமிழத்தேசியக் கூட்டடமைப்பின் அரசியல் நிலைப்பாடாகும். 2009க்குப் பின்னர் கூட்டமைப்பு இதுவரைகாலம் தமிழ் மக்கள் பின்பற்றிய தமிழ் தேசிய அரசியலைக் கைவிட்டு இணக்க அரசியலுக்கு சென்றது. இதற்கான நிகழ்ச்சி நிரல் இந்தியா – அமெரிக்க கூட்டினால் 2009 க்கு முன்னரே வரையப்பட்டது. 2009 க்கு பின்னர் கூட்டமைப்பையும் அந்த நிகழ்ச்சி நிரலின் பங்காளியாக்கியது. இதுதான் தமிழ் தேசிய அரசியலின் நெருக்கடிக்கு மிகப்பெரும் காரணமாகியது. இச் சிதைப்பு நடவடிக்கை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் கட்டத்தில் கூட்டமைப்பிலிருந்து புலிநீக்கம் இடம்பெற்றது. 2004 தேர்தலின் போது புலிகளால் வேட்பாளர்களாக்கப்பட்ட செல்வராசா கஜேந்திரனும், பத்மினி சிதம்பரநாதனும் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இணக்க அரசியலை ஏற்றுக் கொள்ளாததினால் கஜேந்திரகுமார் தானாக கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். இவர்கள் மூவரும் வேறு சிலருடன் இணைந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினர் என்பது வரலாறு. கூட்டமைப்பிலிருந்து புலிநீக்கம் மேற்கொள்ளப்பட்டமைக்கு இந்தியாவின் அழுத்தங்கள்தான் காரணம் என்றும் செய்திகள் வந்திருந்தன.

இரண்டாவது கட்டத்தில் தமிழ் அரசியலிலிருந்து தமிழ்த் தேசியம் என்ற கோட்பாடு நீக்கம் செய்யப்பட்டது. வடகிழக்கு இணைப்பை கூட்டமைப்பு கொள்கை ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கைவிட்டது. வாக்கு வேட்டைக்காக தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஆங்காங்கே கூறினாலும் நடைமுறைச் செயற்பாட்டில் முழுமையாக கைவிட்டது. இங்கு வட கிழக்கு இணைப்பு இல்லையென்றால் தாயகம் இல்லை. தாயகம் இல்லை என்றால் தமிழ்த் தேசியம் இல்லை. தமிழ்த் தேசியம் இல்லை என்றால் தமிழ் அரசியலுக்கு அர்த்தம் இல்லை. என்கின்ற தர்க்க நியாயம் சிறிது கூட கவனத்தில் எடுக்கப்படவில்லை.

அடுத்தது சிங்கக்கொடி ஏற்றியமையாகும். இங்கு சிங்கக் கொடி என்பது அரச அதிகாரக்கட்டமைப்பிலிருந்து தமிழர்களை அகற்றி கொடி என்பதை கூட்டமைப்பு அசட்டை செய்தது. இதே போல சுதந்திரதினம் என்பது தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு சிங்கள தேசத்திற்கு கொடுத்த அனுமதிப்பத்திரம் என்பதையும் கூட்டமைப்பு கவனத்தில் கொள்ளாமல் சுதந்திர தின நிகழ்வில் பங்கு பற்றியது.

1956ம் ஆண்டு சம்பந்தனின் சொந்தத் தொகுதியான திருகோணமலைத் தொகுதியில் சுதந்திரதினத்தன்று கறுப்புக் கொடி ஏற்றியமைக்காக திருமலை நடராஜன் சுட்டுக் கொல்லப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரலாறு சம்பந்தனுக்கோ, சுமந்திரனுக்கோ தெரியாததல்ல. தமிழ் தேசிய இருப்பைத் தக்க வைப்பதில் தேசியக் கொடி எதிர்ப்புக்கும், சுதந்திர தின பகிஸ்கரிப்புக்கும் தொடர்ச்சியான எதிர்ப்பு அரசியலுக்கும் பெரும்பங்குண்டு.

மூன்றாவது கட்டத்தில் உட்கட்சிப் போராட்டம் நடத்தியவர்கள் இணக்க அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைக்க மறுத்தவர்கள். தமிழரசுக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். அனந்தி, சிவகரன் இவ்வாறே நீக்கப்பட்டனர். பேராசிரியர் சிற்றம்பலம் ஒதுக்கப்பட்டார். பேராசிரியர் சிவச்சந்திரன் தானாகவே ஒதுங்கினார்.

நான்காவது கட்டத்தில் கூட்டமைப்பு இணக்க அரசியலுக்கு நேரிடையாகச் சென்றது. தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் பற்றி எந்தவித உத்தரவாதமும் இல்லாது இந்த முடிவினை எடுத்தது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் சம்பந்தன் பெற்றுக் கொண்டார். எதிர்கட்சித் தலைவர் பதவி என்பது முழு இலங்கைக்குமான பதவி, சிங்கள அரசாங்கத்தையும் பெருந்தேசியவாதத்தையும் ஏற்றுக் கொண்ட பதவி. தமிழர்கள் இலங்கையர்களாக ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் இப்பதவியை வைத்துக் கொண்டு என்னதான் செய்ய முடியும். சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராக இருந்த போதும் அரசாங்கத்தின் ஒரு பங்காளி போலவே செயற்பட்டார். விளைவு அவரால் எதிர்கட்சித்தலைவராகவும் இருக்க முடியவில்லை. தமிழர் தலைவராகவும் இருக்க முடியவில்லை. மறுபக்கத்தில் இவ் எதிர்க் கட்சித் தலைவர் பதவியும், இணக்க அரசியலும் தமிழ்த் தேசிய அரசியலை மிக மோசமான வகையில் நீர்த்துப் போகச் செய்தது. எதிர்ப்பு அரசியல் கைவிடப்பட்டதோடு பச்சை ஆக்கிரமிப்புக்களின் போது மௌனம் காக்கும் நிலையையும் உருவாக்கியது. பல சந்தர்ப்பங்களில் ஆக்கிரமிப்புக்கு துணை போகவும் செய்தது. சிங்களக்குடியேற்றங்களுக்கு காணிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் பங்கு கொண்டமையூடாக அங்கீகாரம் வழங்கியமை இதற்கு சிறந்த உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது தமிழ் அரசியலின் சர்வதேசமயத்தை நீக்கம் செய்தமையாகும். தமிழ் மக்களின் இதுவரை கால போராட்டம் தமிழ்த் தேசிய அரசியல் நியாயப்பாடுகளை சர்வதேசமயப்படுத்தி யிருந்தது. சர்வதேச சிவில் சமூகம் இதன் விளைவாக இனப் பிரச்சினை ஒன்று இருக்கின்றது. அது தீர்க்கப்படல் வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தது. இக் கருத்தினை மேலும் பலப்படுத்தி அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்திருக்கலாம். ஆனால் கூட்ட மைப்பு ஏற்கனவே இருக்கும் மாகாணசபை முறையை தீர்வாக ஏற்றுக் கொண்டமையாலும், இணக்க அரசியலை மேற்கொண்டு அரசின் பங்காளியாக மாறியதனாலும் சர்வதேச அபிப்பிராயம் நீர்த்துப் போக வழி வகுக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கென ஒரு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கி அதன் அடிப்படையில் ராஜதந்திரப் பயிற்சி பெற்ற லொபியையும் உருவாக்கி சர்வதேச ஆதரவைப் பலப்படுத் தியிருக்கலாம். இச் செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பு இடம் கொடுக்க வில்லை. சர்வதேசத் தளமான ஜெனிவாவில் அரசாங்கத்தின் பங்கா ளியாகவே கூட்டமைப்பு செயற்பட்டது. தமிழ் மக்கள் நலன்பற்றி சிறிது கூட கவனத்தில் எடுக்கவில்லை.

ஆறாவது தமிழ் தேசிய அரசியலை அபிவிருத்தி அரசியலாக சுருக்கியமையாகும் இணக்க அரசியலை நியாயப்படுத்த காரணங்கள் எதுவும் கிடைக்காத போது தமிழ்த் தேசிய அரசியலை அபிவிருத்தி அரசியலாக சுருக்கியது. அரசியல் கோரிக்கைகளை அழுத்தமாக வலியுறுத்துவதற்கும் அதற்கான போராட்டங்களை முன்னெடுப் பதற்கும் பதிலாக அபிவிருத்தி அரசியலை பிரதான விவகாரமாக்கியது. அரசியல் கோரிக்கைகளுக்காக மக்கள் போராடும் போது கூட்டமைப் பினர் பங்களிப்பு எவற்றையும் செய்யவில்லை. இரண்டாம் மட்டத் தலைவர்கள் சிலர் மாத்திரம் போராட்டங்களில் பார்வையாளர்களாக பங்கு பற்றினர். கூட்டமைப்பின் தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ள சம்பந்தனோ, சுமந்திரனோ எந்த போராட்டத்திலும் பங்குபற்றி யதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய கட்டங்களினூடாக கூட்டமைப்பு தமிழ் தேசிய அரசியலை செங்குத்தாக கீழிறக்கியது. இதனால் புறநிலைச் சிதைப் பிலும் பார்க்க இவ் அகநிலைச் சிதைப்பே தமிழ்த்தேசிய அரசி யலை மிகமோசமாகப் பாதித்தது. தமிழ்த்தேசிய சக்திகள் புறநிலைச் சிதைப்பிற்கு முகம் கொடுப்பதற்கு பதிலாக கூட்டமைப்பின் அக நிலைச் சிதைப்பிற்கு முகம் கொடுப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது. அரசாங்கமும் காணிப்பறிப்பு, சிங்களக் குடியேற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் போனோர் விவகாரம், எனப் பல முனைகளில் களங்களைத் திறந்து விட்ட தால் எதற்கு போராடுவது என திணற வேண்டிய நிலையும் தமிழ் தேசிய சக்திகளுக்கு ஏற்பட்டது. இவ்வளவிற்கும் போராட்டச் செயற் பாட்டாளர்கள் மிகக் குறைந்தளவிலேயே இருந்தனர். வினைத்திற னான அரசியல் தலைமை இல்லாமையும், தோல்வி மனப்பான்மையும் அரசியல் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைத்திருந்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மேற்கூறியவாறு தமிழ்த்தேசிய அரசியலை செங்குத்தாக கீழிறக்கிய நிலையில்தான் மாற்று அரசியல் இயக்கம் ஒன்றின் அவசியம் உணரப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாற்று அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தது. மிகக் கடின மான சூழல் இருந்தபோதும் தமிழ் சிவில் சமூகம், புலம்பெயர் சமூகம் தமிழ் தேசியத்தில் அக்கறை கொண்ட கல்விச்சமூகம் அதற்கான ஆதரவை வழங்கியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாற்று அரசியல்இயக்கத்திற்கானகோட்பாட்டுத்தளத்தைஉருவாக்கியதோடுபுற நிலைச் சிதைப்பை எதிர்த்து அடையாளப் போராட்டங்களையும் நடத்தியது. இது விடயத்தில் கஜேந்திரகுமாரின் பங்களிப்பு அளப் பரியது. அவர் தனது அரசியல் வாழ்வை விலையாகக் கொடுத்து தமிழ் தேசிய அரசியலை கருநிலையில் பாதுகாத்தார். அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றது. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு வெகுஜனக் கவர்ச்சியைக் கொடுத்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அதிர்ப்திப்பிரிவு என்பன ஒரு ஐக்கிய முன்னணியாக இணைந்து தமிழ் மக்கள் பேரவைக்கு அரசியல் பலத்தைக் கொடுத்தன. இரண்டு எழுகதமிழ் போராட்டங்கள் தமிழ் மக்கள் பேரவையை அரசியல் அரங்கில் பிரபலப்படுத்தின.

தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கும் போது அதில் இணைந்த அரசியல் கட்சிகளுக்கும், சிவில் உறுப்பினர்களுக்கும் அவ் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற தெளிவு இருந்ததோ இல்லையோ அது ஒரு தேசிய அரசியல் இயக்கமாக பரிணமிக்க வேண்டியிருந்தது. அதாவது தமிழ் மக்களின் அனைத்து விவகாரங் களையும் உலகம் தழுவிய வகையில் கையாளக் கூடிய ஒரு தேசிய அரசியல் இயக்கமாக வளர வேண்டியிருந்தது. இத்தேசிய அரசியல் இயக்கம் அரசியல் கட்சிகளையும், மக்கள் அமைப்புக்களையும் இணைத்ததாக ஆனால் மக்கள் அமைப்புகளின் மேலாதிக்கம் உள்ள கட்டமைப்பைக் கொண்டதாக செயலாற்ற வேண்டியிருந்தது. மக்கள் அமைப்புக்கள் ஒரு ஐக்கிய முன்னணிக்குள் வரும் போதும், அரசி யல் கட்சிகள் ஒரு ஐக்கிய முன்னணிக்குள் வரும் போதுமே தமிழ் மக்கள் பேரவை பலமாக இருந்திருக்கும். துரதிஸ்டவசமாக மக்கள் அமைப்புகள் போதியளவு இணைக்கப்படவில்லை. இதனால் அரசி யல் கட்சிகளின் மேலாதிக்கமே பேரவையில் இருந்தது. தேர்தலின் போது அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடு ஏற்பட்டதால் இன்று தமிழ் மக்கள் பேரவை மிகவும் பலவீனமாகப் போயுள்ளது. இதுவும் தமிழ் தேசிய அரசியலை மிகவும் மோசமாகப் பாதித்தது. இந்தப் பல வீனப்படுத்தலுக்கு தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து கொண்ட அனைத்துக் கட்சிகளும் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும்.

தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கும் போது இரண்டு விடயங்களைக் கவனத்திலெடுக்க வேண்டும் ஒன்று தமிழ்த்தேசியத் தின் அடித்தளம் ஜனநாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஜன நாயகம் என்று வந்துவிட்டால் ஒருவர் மற்றையவருக்கு சமமானவர், ஒரு அமைப்பு மற்றைய அமைப்புக்கு சமமானது என்ற கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றப்படல் வேண்டும். இரண்டாவது ஐக்கிய முன்னணி ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும் தமிழ் சமூகத்தில் பல்வேறு குழுக்கள் உருவாகலாம் அக்குழுக்களை பொது கொள்கையின் கீழ் ஒன்றிணைத்து ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்க வேண்டும். இந்த ஐக்கிய முன்னணி அரசியற் கட்சிகள் மத்தியிலும் கட்டியெழுபப்படல் வேண்டும். மக்கள் அமைப்புக்கள் மத்தியிலும் கட்டியெழுப்பப்படல் வேண்டும். இவ் ஐக்கிய முன்னணி இல்லாமல் தமிழ்த்தேசியத்தின் அடிப்படையான மக்கள் திரளின் கூட்டுப் பிரக்ஞையை உருவாக்க முடியாது.

தமிழ்த்தேசியத்திற்கு ஏற்பட்ட இரண்டாவது நெருக்கடி தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுத்தளம் தமிழ்த்தேசியத்துடன் இணைக்கப்படாமையாகும், தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் திரளை உருவாக்குவதில் பண்பாட்டுத்தளமே அதிக பங்களிப்பைச் செலுத்தக் கூடியது. சிங்கள தேசத்திலும், முஸ்லிம் தேசத்திலும் பண்பாட்டுத்தளம் அத் தேசியங்களோடு வலுவாக இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்த் தேசியத் தளத்தில் மட்டும் பண்பாட்டுத் தளத்திற்கும், தேசியத்திற்குமிடையில் தீண்டாமை பின்பற்றப்படுகிறது. இதனால் பண்பாட்டுத்தளம் சமூகத்தின் பிரதான விவகாரத்துடன் ஒட்டாமல் தனித்துப் பயணிக்கும் அவல நிலை தோன்றியுள்ளது.

பண்பாட்டுத்தளத்தில் சமயம், இலக்கியம், கலை என்பன முக்கியமானவை. சமயத்தைப் பொறுத்தவரை வெறும் சமயச்சடங்குகளுக்கப்பால் அதனைச் சமூகமயப்படுத்தியதில் நாவலருக்கும், சுவாமி விபுலானந்தருக்கும் பெரும் பங்குண்டு. இவர்களுக்குப் பின் சமூகமயப்படுத்தியவர் தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார். தற்போது ஆறுதிருமுருகன் அதனைத் தொடர்கின்றார். சமூகமயமாக்கத்தின் அடுத்த கட்டம் தேசியமயமாக்கலாக இருக்க வேண்டும். நீண்ட காலம் இது இடம்பெறவில்லை தற்போது மருத்துவர் நந்தகுமார் தலைவராக உள்ள சைவ மகாசபை இதுவிடயத்தில் சில முனனெடுப்புக்களைச் செய்கின்றது. சின்மயா மிஷன் சுவாமியும் ஓரளவு பங்களிப்புக்களைச் செய்கி–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரை ஒப்பீட்டு ரீதியில் தமிழ்த் தேசியத்துடனான அதன் இணைப்பு அதிகம் எனலாம்.

இதே போல இலக்கியத்தளமும் தமிழ்த்தேசியத்திற்கு வெளியிலேயே நின்றது. சமூக மாற்ற விவகாரங்களுக்கு முக்கியத் துவம் கொடுத்த அளவிற்கு இலக்கிய அமைப்புக்கள் தமிழ்த்தேசியத் திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. படைப்புகள் பல வெளி வந்தன என்பது உண்மை தான். அப்படைப்பாளிகள் தம்மை அமைப் பாக்கி செயற்படவில்லை. தற்போது மதுசூதனன், மோகன், செல்வ மனோகரன் போன்றோர் "சமூகவெளி" என்ற அமைப்பை உருவாக்கி சில முன்னெடுப்புக்களைச் செய்கின்றனர்.

கலைச் செயற்பாட்டைப் பொறுத்தவரை குறிப்பாக நாடகக் கலையைப் பொறுத்த வரையும் இதே நிலைதான் நீண்ட காலம் நில வியது. கலாநிதி சிதம்பரநாதன் இதில் சில முறிவுகளைக் கொண்டு வந்து நாடகக்கலையை தேசியத்துடன் இணைத்தார். யாழ்பல்கலைக் கழக கலாச்சார குழுவினால் சிதம்பரநாதனின் நெறியாள்கையுடன் மேடையேற்றப்பட்ட மண்சுமந்த மேனியர்–1, மண்சுமந்த மேனியர்–2 என்பன இப்போக்கில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது. தற்போது பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூட்டத்தின் மூலம் அவர் சில முன்னெடுப்புக் களைச் செய்கின்றார். அவர் தேசியப் பண்பாட்டை ஒரு வாழ்வு முறையாக மாற்றுவதற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றார். பண்பாட்டுச் செயற்பாட்டின் மூலம் தமிழ்த்தேசியத்தை வலுவாக்கலாம் என்பது அவரது நம்பிக்கையாக உள்ளது.

மூன்றாவது நெருக்கடி புலமையாளர் குழாமும் தமிழ்த் தேசியத்துடன் இணைந்து பயணிக்காமையாகும். இது விடயத்தில் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் பெரும் பணி இருந்தது. பல்கலைக்கழகமாக இப்பணியினை போதியளவு மேற்கொள்ளவில்லை. தேச நிர்மாணத்தில் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும் பங்களித்திருக்க வேண்டும். ஒரு சிலர் மட்டும் தனிப்பட்ட ரீதியில் பங்களிப்புச் செய்திருந்தனர். போராட்ட மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழகம் பங்களிப்பைச் செய்து வருகின்றது என்பதை மறுக்கவில்லை. புலமை மட்டத்தில் பெரிய பங்களிப்பைச் செய்ய வில்லை. யாழ் பல்கலைக்கழக சட்ட பீடத்தலைவர் குருபரன், அரசறி வியல் துறைத்தலைவர் கணேசலிங்கம், நாடக அரங்கியல் துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் சிதம்பரநாதன் என்போர் மட்டும் சில பங் களிப்புக்களைச் செய்து வருகின்றனர். கருத்துருவாக்கச் செயற்பாட்டில் சமூக விஞ்ஞான ஆய்வு மையம் சில பங்களிப்புக்களைச் செய்து வருகின்றது. தமிழ் சிவில் சமூக அமையம் முன்னர் செய்த போதும் தற்போது கைவிட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு வெளியே சமூக ஆய்வாளர் நிலாந்தன் பங்கு மட்டும் வலிதாகவுள்ளது. சமூகவெளி அமைப்பின் பங்களிப்பையும் குறிப்பிட்டுக் கூறலாம். எனினும் புலமைச் செயற்பாடு ஒரு குழுச் செயற்பாடாக பெரிதளவிற்கு வளரவில்லை.

நான்காவது நெருக்கடி அடிப்படைச் சக்திகளையும் சேமிப்புச் சக்திகளையும், நட்புச் சக்திகளையும் இணைக்கும் பணி போதியள விற்கு இடம்பெறாமையாகும். தமிழ் மக்கள் ஒரு சிறிய தேசமாக இருப்பதால் அக ஆற்றலில் மட்டும் நம்பியிருக்க முடியாது. புற ஆற்றலையும் சாதகமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். தாயக மக்களும், அதன் நீட்சியாகவுள்ள புலம்பெயர் மக்களும் தமிழ் தேசத்தின் அடிப்படை சக்திகளாவர். இச்சக்திகள் முறைாக அணிதிரட்டப் படவில்லை. ஜனநாயக அடித்தளத்தையும் ஐக்கிய முன்னணியையும் கொண்டு தேசிய அரசியல் இயக்கத்தை உருவாக்காமல் இச்சக்திகளை முறையாக அணிதிரட்ட முடியாது.

மலையக மக்கள், தமிழக மக்கள் உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழித் தமிழ் மக்கள் தமிழ்த் தேசத்தின் வலுவான சேமிப்புச் சக்திகளாவர். இச்சக்திகளை கொள்கை, வேலைத்திட்டம் என்பவற்றின் அடிப்படையில் அணிதிரட்ட வேண்டும். "உலகத் தமிழ் தேசியவாதம்" என்கின்ற ஒரு கோட்பாட்டை இது விடயத்தில் கட்டி யெழுப்பலாமா? என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். ஆயுதப் போராட்ட காலத்தில் இவ் அணிதிரட்டல் சிறிதளவாவது இடம்பெற்றது. பின்னர் அச்செயற்பாடு தேங்கிப்போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகள் தமிழ் தேசத்தின் வலுவான நட்புச் சக்திகளாவர். இவர்கள் முறையாக அணிதிரட்டப்பட வேண்டும். ஆயுதப் போராட்ட காலத்தில் கூட இது விடயத்தில் முறையான செயற் பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் ஒரு சில முன்னெடுப்புக்கள் இடம்பெற்றது என்பது உண்மைதான். ஆனால் அவை போதியதாக இருக்கவில்லை. முன்னர் "தேதுன்ன" என்ற சிங்களப் பத்திரிகை ஒன்றும் வெளிவந்திருந்தது. தோழர் மாசேதுங் யப்பானுக்கெதிராக போராடிய போது யப்பானுக்குள் சீனாவிற்கு சாதகமான சக்திகளை திரட்டிக்கொள்ள வேண்டும் என்பதை முன் நிபந்தனையாக வைத்திருந்தார். இது சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ள வேண்டிய பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்து கின்றது. இவ் நட்புச் சக்திகளை திரட்டுவதன் மூலம் பிராந்திய வல்லரசும், சர்வதேச வல்லரசுகளும் தமிழ் தேசியத்திற்கு எதிராக செயற்படு வதையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம்.

இச்சக்திகளை திரட்டுவதற்கு இரண்டு விடயங்கள் முன் நிபந்தனையானவை ஒன்று தமிழ்தேசியம் சமூக மாற்றத்தையும் கொள்கைத்திட்டத்திலும், வேலைத்திட்டத்திலும் உள்ளடக்கியிருக்க வேண்டும். இரண்டாவது நிலம், புலம், தமிழகத்திற்கிடையே ஒரு ஒருங்கிணைத்த வேலைத்திட்டம் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

ஐந்தாவது புவிசார் அரசியலில் பங்காளிகளாக மாறுவதற் குரியமூலோபாயங்களையும்தந்திரோபாயங்களையும்உருவாக்கிசெயற் படாமையாகும். இலங்கைத்தீவை மையமாக வைத்து அமெரிக்க தலைமையிலான மேற்குலக இந்தியக் கூட்டிற்கும் சீனாவிற்கும் இடையே ஓர் புவிசார் அரசியல் போட்டி இடம் பெறுகின்றது. இலங்கைத் தீவில் இடம் பெறுகின்ற அனைத்து அரசியல் மாற்றங்களையும் இப் புவி சார் அரசியல் போட்டியே தீர்மானிக்கின்றது. புலிகள் அழிக்கப் பட்டதற்கும் மகிந்த தோற்கடிக்கப்பட்டதற்கும் மீள மகிந்தர் மேலெழும் சூழ்நிலை உருவாகுவதற்கும் இப்புவிசார் அரசியல் பிரதானமான காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தாயகம் கேந்திர இடத்தில் இருப்பதால் இப் புவிசார் அரசியலில் தமிழ் மக்களும் கௌரவமான பங்காளிகளாவர். தமிழ் நாடும் கேந்திர இடத்தில் இருப்பதால் தமிழ் மக்களின் புவிசார் அரசியல் பலம் இரட்டிப்பானதாகும். புவிசார் அரசியல் பலம் காரண மாக தமிழ் மக்களின் விவகாரத்தை கைவிட்டு வல்லரசுகள் நகர முடியாத நிலையில் இருந்தன. தற்போது தமிழ் தலைமைகளை தங்கள் பொக்கற்றுக்குள் வைத்துக்கொண்டு புவிசார் அரசியல் மைதானத்தி லிருந்து தமிழ் மக்களை அகற்றியுள்ளனர். தமிழ் மக்களைப் பயன் படுத்தி தங்களுடைய நலன்களை மட்டும் கவனிக்கின்றன. இந்த நிலமையை மாற்றி தமிழ் மக்கள் மீண்டும் பங்காளிகளாக வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டு வெடிப்புக்கு பின்னர் புவிசார் அரசியலின் முக்கியத்துவம் மேலும் உயர்ந்துள்ளது. இலங்கைத் தீவு சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிகழ்ச்சி நிரல் செல்லும் இடமெல்லாம் இலங்கைத் தீவு இனிச் செல்லும். அமெரிக்கா சோபா உடன்படிக்கை மூலம் இலங்கைத்தீவில் சுதந்திரச் செயற்பாட்டிற்கான களத்தை திறக்க முயற்சிக்கின்றது. சீனா மைத்திரியை சீனாவிற்கு அழைத்து ஒப்பந்தம் செய்ததன் மூலம் இரகசியமாக தனது நிலையை உறுதிப்படுத்திவிட்டது. இந்தியாவும் மோடியின் குறுகிய பயணத்தின் மூலம் தனது நிலையை உயர்த்த முயற்சிக்கின்றது.

இலங்கைத் தீவினை மையமாகக் கொண்ட இந்தப் புவிசார் போட்டிகளில் சீன அணிப்பக்கம் தமிழ் மக்களுக்கு மூடப்பட்டு விட்டது. இதனால் தமிழ் மக்கள் விரும்பினாலென்ன? விரும்பா விட்டாலென்ன? அமெரிக்கா இந்திய கூட்டு அணியுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வேண்டியுள்ளது. எனவே அதற்கான மூலோ பாயங்கள் தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். தமிழ் மக்களுக்கென ஒரு வெளிவிவகாரக் கொள்கையும் பயிற்சிபெற்ற இராஜதந்திர அணியும் இல்லாமல் இதற்கான வேலைத்திட்டங்களை நகர்த்த முடியாது. இது விடயத்தில் அமெரிக்கா இலங்கைத்தீவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அணிக்கு சார்பாக உள்ள ஒரேயொரு மக்கள் பிரிவாக தமிழ் மக்கள் இருப்பதனால் வாய்ப்புக்கள் நிறையவே உருவாகும்.

ஆறாவது தமிழ் மக்களின் அரசியல் புலமை நிலையில் தொகுத்து முன்வைத்து அதனைத் தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேசுபொருளாக்காமையாகும். இக்குறைபாடு நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் வளர்ந்த அளவிற்கு அதன் அரசியல் புலமை நிலையிலும் தர்க்க நிலையிலும் வளரவில்லை. இதன் விளைவு சம்பந்தன் போன்ற மூத்த தலைவர்களே தமிழ் மக்களை சிறு பான்மை இனம் என விழிக்கும் நிலை உருவாகின்றது. அரசியல் தீர்வு விடயத்திலும் தமிழ் மக்களின் இருப்பிற்கு உதவாத அரைகுறைத் தீர்விற்கு இணங்கிப்போகும் நிலை ஏற்படுகின்றது. தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனமல்ல ஒரு தேசிய இனம். அவர்கள் தங்கள் உரிமைக் காகப் போராடவில்லை. விடுதலைக்காகப் போராடுகின்றனர் என்ற விடயம் 1970 களிலேயே நிலைநிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் எமது அரசியல் தலைமைகளும் ஊடகத்துறையும் இதன் உள்ளார்ந்த அர்த்தத்தை வலுவாகப் பற்றிப்பிடிக்கவில்லை.

அதே போல தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்திலும் இக்குறைபாடு உள்ளது. இனப்பிரச்சனை என்றால் என்ன? என்பது பற்றி போதிய தெளிவு இல்லாமையே இதற்குக் காரணமாகும். முன்னரே கூறியதுபோல இனப்பிரச்சனை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவதுதான். அதாவது தேசத்தைத் தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பது அழிக்கப்படுவதுதான். எனவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது இவ்வழிப்பிலிருந்து தமிழ் மக்களைப்பாது காப்பதற்காக இருக்க வேண்டும். அதற்கு கோட்பாட்டு அடிப்படையில் தேசம், இறைமை, சுயநிர்ணயம், சுயநிர்ணயத்தை நடைமுறைப்படுத் துவதற்கான ஆட்சிப்பொறிமுறை அங்கீகரிக்கப்படல் வேண்டும். அதே வேளை அரசியல் தீர்விற்கான யாப்பு வடிவத்தில் தாயக ஒருமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை நிலைநிறுத்தும் வட – கிழக்கு இணைப்பு, சுயநிர்ணய முடைய ஆட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேசமாக பங்கு பற்றுவதற்குரிய வாய்ப்பு, வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கான பாது காப்பு என்பவற்றிற்கு போதிய உத்தரவாதங்கள் வேண்டும். இணைந்த வடகிழக்கில் முஸ்லீம் மக்களின் நிலை என்னவாக இருக்க வேண்டும் என்பது தொடர்பாக அவர்களுடன் பேசித்தீர்க்கலாம். அவர்களது தனி அதிகார அலகுக் கோரிக்கையையும் பரிசீலிக்கலாம். முஸ்லீம்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை என்றால் மாற்றுத் தெரிவாக தமிழ்ப் பிரதேசங்களை நிலத்தொடர்ச்சியற்ற வகையில் இணைக்கும் முடிவிற்குத் தமிழ்த்தரப்பு வரவேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் இலக்கு இதுதான் என்றால் இந்த அரசியல் நிலைப்பாடு புலமை நிலையிலும் தர்க்க ரீதியாகவும் தொகுக்கப்பட்டு தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் உடனடி யாக பேசுபொருளாக்க வேண்டும். தமிழ் அரசியல் சக்திகள் இந்த அரசியல் நிலைப்பாட்டை விட்டு இறங்கிவராத நிலையை உருவாக்க வேண்டும்.

ஏழாவது நெருக்கடி தமிழ்த்தேசிய அரசியல் சமூகமாற்ற அரசியலை போதியளவு உள்வாங்காமையாகும். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞை. தமிழ்த் தேசியம் என்பது தமிழ் மக்களின் கூட்டுப் பிரக்ஞையாகும். இம் மக்கள் திரளுக்கு தடையாக இருப்பவையெல்லாம் தமிழ்த் தேசியத்திற்கு தடையானவையே. தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் அக முரண்பாடுகளான சாதி, மதம், பிரதேசம், பால் போன்றவை இத்தடைகளாக உள்ளன. இத்தடைகளை நீக்குவதற்கு சமூக மாற்ற அரசியல் போதியளவிற்கு உள்வாங்கப்படுதல் வேண்டும். தேசிய சக்திகளுக்கும், சமூகமாற்ற சக்திகளுக்குமிடையே பலமான கூட்டிணைப்பு வேண்டும். ஆனால் துரதிஸ்ட வசமாக இக்கூட்டு போதியளவு உருவாக்கப்படவில்லை. இதனால் தேசியத்தளத்தி–ற்கு வெளியே தான் சமூக மாற்ற சக்திகள் அதிகளவில் உள்ளனர். இது தமிழ்ச் சமூகத்தில் பாரிய இடைவெளிகளை உருவாக்கி விடுக–ின்றது. எதிரிகளுக்குப் பயன்படும் நிலையும் தோன்றி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்ற சக்திகள் வெளியில் நிற்பதனால் தேசியத்தளத்தில் செயற் படுகின்ற விரல் விட்டு எண்ணக் கூடிய சக்திகளும் பலவீனமாகி விடுகின்றனர்.

எனவே இத்தகைய மாற்றம் தமிழ்த் தேசிய அரசியலை சமூக மாற்ற அரசியலையும் உள்ளடக்கியதாக கட்டியெழுப்ப வேண்டும். இச் செயற்பாடு நடைபெறாததன் விளைவுகளை வரணியிலும், திருக்கேதீஸ்வரத்திலும் பார்க்க முடிந்தது. வரணியில் சாதி முரண்பாடு காரணமாக கோயில் திருவிழா நிறுத்தப்பட்டது. திருக்கேதீஸ வரத்திலும் இந்துக்களின் வளைவு அடித்து நொருக்கி வீழ்த்தப்பட்டது. இன்றும் கூட தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற அக முரண்பாடுகளை இல்லாதொழிக்கும் ஆற்றல் தமிழ்த்தேசியத்திற்கு மட்டுமே உண்டு. ஏனெனில் மக்கள் திரளை கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை தமிழ்த்தேசியத்திற்கு உள்ளது.

எட்டாவது நெருக்கடி மக்கள் பங்கேற்பு அரசியல் இல்லாமை யாகும். இதுவும் மரபு ரீதியான ஒரு குறைபாடாகும். தமிழரசுக் கட்சிக் காலத்தில் தொண்டர்கள் அரசியலில் பங்கேற்றனர். மக்கள் பார்வை யாளராக வெளியில் நின்றனர். மக்கள் பங்கேற்பு அரசியல் என்பது மக்களை அரசியல் மயப்படுத்தி அமைப்பாக்குவதாகும். இந்தக் குறைபாடு காரணமாக ஒரு ஜனநாயக அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்ப முடியவில்லை. வலுவான ஐக்கிய முன்னணியையும் கட்டியெழுப்ப முடியவில்லை. ஐக்கிய முன்னணி விவகாரத்தை பொறுத்தவரை தமிழர் விடுதலைக் கூட்டணி , ஈழத்தேசிய விடுதலைக் கூட்டணி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பேரவை அனைத்தும் தோல்வியைத் தழுவியுள்ளன.

தமிழ் அரசியலின் இன்றைய காலகட்டம் சர்வதேச அரசியலை வெற்றிகொள்ளும் காலகட்டம். வலுவான ஜனநாயக செயற்பாடுகளும் அதற்கான ஜனநாயக இயக்கங்களும் இல்லாமல் இவ்விவகாரத்தில் முன்னேறிச் செல்ல முடியாது. துரதிஸ்டவசமாக இதுபற்றிய ஆரோக்கியமான உரையால்கூட இதுவரை தொடங்கப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது தமிழ் மக்களிற்கென அதிகாரமையம் ஒன்று கட்டியெழுப்பப்பட்டமையாகும். விடுதலைப் புலிகள் இருந்த காலம் வரை பல விமர்சனங்கள் இருந்தாலும் அது ஒரு அதிகார மையமாக இருந்தது. அதன் தலைமையில் தேச நிர்மாண வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இன்று அவ் அதிகார மையமில்லை. இதனால் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மறுபக்கத்தில் ஆக்கிரமிப்பு, அரசியல் தீர்வு விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், போரினால் பாதிக்கப் பட்டவர்களின் நலன் பேணும் விவகாரம், பொருளாதார அடித் தளங்களைக் கையாளும் விவகாரம், சர்வதேச, பிராந்திய விடயங்களைக் கையாளும் விவகாரம், நிலம், புலம், தமிழகம் ஒருங் கிணைந்த வேலைத்திட்டங்களை உருவாக்கும் விவகாரம் என தேச நிர்மான வேலைத்திட்டங்கள் குவிந்து கிடக்கின்றன. வலுவான அதிகார மையமும், மையப்படுத்தப்பட்ட நிதி சேகரிப்பு திட்டமும் இல்லாமல் இவ்விடயங்களில் முன்னேற முடியாது.

பத்தாவது தமிழ்த்தேசிய அரசியலிலிருந்து கிழக்கு விலகிச் செல்லும் போக்கு வளர்ந்து வருவதாகும். இதுவும் தமிழ் அரசியலின் மரபு ரீதியான குறைபாட்டினால் உருவான ஒன்றுதான். கிழக்கில் தமிழ் – முஸ்லீம் முரண்பாடு ஒன்று உள்ளது. அதனைக் கையாள்வதற்கான மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் வகுக்கப்படல் வேண்டும் என்பது கவனத்தில் எடுக்கப்படவில்லை. இது விடயத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாடு தோல்வியடைந்துவிட்டது. ஆனாலும் தமிழ் அரசியல் சக்திகள் இன்னமும் அக் கோட்பாட்டை கைவிடவில்லை. இக் கோட்பாடு கிழக்கு தமிழ் மக்களுக்கு கைவிலங்காகியது. வர்கள் அதிலிருந்து விடுபட விரும்புகின்றனர். சிங்களத் தரப்போடு இணைந் தாவது கிழக்கின் அதிகாரத்தை கைப்பற்றவும், தங்கள் இருப்பை உறுதிப்படுத்தவும் முனைகின்றனர். இதற்காக வடக்கு – கிழக்கு இணைப்பை அமத்தி வாசிக்கவும் விரும்புகின்றனர். பெருந்தேசிய வாத சக்திகளும் இதனைக் கவனமாக கையாளுகின்றனர். இப் போக்கு பெருந் தேசிய வாதத்திற்குள் தமிழ்த் தேசியத்தை கரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாயத்தை உருவாக்கும். இதற்கான மாற்று ஏற்பாடுகள் உடனடியாகத் தேவை.

இது விடயத்தில் பெருந்தேசிய வாதிகளுடன் ஒரு உரை யாடலுக்கு செல்லலாமா? என்பது பற்றியும் சிந்திப்பது நல்லது. இலங்கை முஸ்லிம்கள் தங்களை உலக முஸ்லிம்களின் ஒரு பகுதியாக பார்ப்பதனாலும், உலக முஸ்லிம்களின் இருப்பில் தங்களின் இருப்பு தங்கியுள்ளது என நம்புவதனாலும் அரேபிய சிந்தனையை தமது வழிகாட்டியாகக் கொள்வதனாலும் உலகப் பொது முஸ்லிம் அரசி யலிலிருந்து தற்போதைக்கு விடுபடப் போவதில்லை. இந்த நிலை இருக்கும் வரைக்கும் பயங்கரவாத ஆபத்து இலங்கையில் குறிப்பாக கிழக்கில் இருந்து கொண்டேயிருக்கும். இந்த நிலை வளர்ந்தால் இந்தியாவும் தனது படைத்தளங்களை கிழக்கில் நிலைநிறுத்தப் பார்க்கும். இது கிழக்கின் நிலையை மேலும் மோசமாக்கும். இந்தப் போக்கினை இல்லாமல் செய்வதற்கான ஒரே வழி வடகிழக்கை இணைப்பதுதான். இதற்குப் பெருந்தேசியவாதிகளை இணங்கச் செய்ய வேண்டும். வரப்போகும் ஆபத்தைப் புரிந்துகொண்டால் பெருந்தேசிய வாதிகளும் உடன்பாட்டுக்கு வரக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகும். தமிழ்த்தேசிய சக்திகள் இதுபற்றியும் கவனம் செலுத்துவது நல்லது.

மொத்தத்தில் தற்போதைய காலம் வினைத்திறனுள்ள செயற்பாடுகளை வேண்டிநிற்கும் காலம். சாவால்கள் நிறைய உள்ளன என்பது உண்மைதான். ஆனால் அதேயளவிற்கு வாய்ப்புக்களும் நிறையவே உள்ளன. அரசியல் என்பது வாய்ப்புகளின் பலத்தில் நின்று கொண்டு சவால்களை களையும் கலைதான்.

புதிய தலைமுறை மீது வரலாறு நிறையவே பொறுப்புக்களைச் சுமத்தியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை வெளிவந்த நூல்கள்

01. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணி யின் அறிக்கையும் தமிழ் மக்களும்

சி.அ.யோதிலிங்கம்

02. இந்தியாவும் தமிழ்மக்களும்

சி.அ.யோதிலிங்கம்

03. நினைவு கூர்தல் –2017

நிலாந்தன்

04. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்"

சி.அ.யோதிலிங்கம்

05. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும்

சி.அ.யோதிலிங்கம்

06. இந்து சமுத்திரமும் சீனாவும்

கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்

07. வட–கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும்

"சி.அ.யோதிலிங்கம்

08. இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள்

சி.அ.யோதிலிங்கம்

09. ஈழத் தமிழர் அரசியல் வரலாறு – 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்கக் குறிப்புக்கள்) பாகம் – 01

சி.அ.யோதிலிங்கம்

10. வடகொரியாவும் சர்வதேச அரசியலும்

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்

11. இலங்கை – இந்தியா ஒப்பந்தமும் தமிழ் மக்களும்

சி.அ.யோதிலிங்கம்

12. மலையக மக்களின் அடையாளம் எது

சி.அ.யோதிலிங்கம்

13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள்

சி.அ.யோதிலிங்கம்

14. 2009 இற்குப் பின்னரான தமிழ் ராஜதந்திரம்

நிலாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org